**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 27.10.2025**
**OS. No. 99/2018**
**வழக்கு சாட்சி PW.1–வேணு , த/பெ. கலைகோவன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என் தந்தை கலைகோவன் சார்பாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் தரப்பினராக உள்ளேனா என்றால் உள்ளேன். என் தந்தை தாவா சொத்தில் எங்களது அனுபவத்தை பிரதிவாதிகள் யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிராதில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் ச.எண்.75/2F, அதன் விஸ்தீரணம் 2180 சதுரடி ஆகும். தாவா சொத்தை என் தந்தை பிப்ரவரி மாதம், 2012 ல் ராஜராமன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார், தேதி எனக்கு நினைவில்லை. தாவா சொத்தை பொறுத்து என் தந்தை பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அந்த பட்டா எண்.2755 ஆகும். தாவா சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் கட்டிடம் உள்ளதா என்றால் இல்லை.

2) தாவா சொத்து என் தந்தையுடையது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் பட்டா, அ–பதிவேடு, அசல் கிரைய ஆவணம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளோம். 1, 2 பிரதிவாதிகள் கணவன், மனைவி என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் வீரக்கல்புதூர் கிராமத்தில் ச.எண்.75/2 ல் 55 சென்ட் நிலத்தை ஆவண எண்.1138/2008 மற்றும் ஆவண எண்.1139/2008 ன் படி கிரையம் பெற்று அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் கிரையம் பெற்ற விவரம் தெரியும், அனுபவத்தில் உள்ளார்களா என்று தெரியாது. 3, 4 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகளின் கூட்டாளிகள் என்று நான் பிராதில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து அருகே சொத்து உள்ளதா என்றால் தெற்கு பக்கம் வீடு உள்ளது.

3) என் தந்தை தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பே 1, 2 பிரதிவாதிகள் ச.எண்.75/2ல் கண்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் ஆகஸ்டு மாதம், 2018ம் வருடம் என் தந்தையிடம் தாவா சொத்தை விலைக்கு கேட்டார்கள், தேதி சரியாக நினைவில்லை. 1, 2 பிரதிவாதிகள் பெயரில் 6ம் பிரதிவாதியிடம் மனு தாக்கல் செய்து, அளவீடுகள் செய்யாமலேயே பட்டா வழங்கியுள்ளதாக நாங்கள் பிராதில் சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி ஸ்தல ஆய்வு செய்யாமல் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக நாங்கள் பிராதில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

4) 1, 2 பிரதிவாதிகள் முறையாக கிரையம் பெற்றசொத்தை 9ம் பிரதிவாதிஸ்தல ஆய்வு மேற்கொண்டு கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் தான் 6ம் பிரதிவாதி உத்தரவு பிறப்பித்து பட்டா வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வீரக்கல் புதூர் பேரூராட்சி எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் ச.எண்.75/11ல் அமைந்துள்ளது. வீரக்கல்புதூர் பேரூராட்சி கட்டிடத்திற்கு சுற்றுசுவர் எப்போது கட்டப்பட்டது என்றால் சரியாக நினைவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 12.11.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.